பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

20 02 2025 **THURSDAY** 12 40 **PM**

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தில்லி முதலமைச்சராக திருமதி. ரேகா குப்தா இன்று பதவியேற்றார்.
- உத்தரபிரதேச அரசின் நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட் சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.
- பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்க வேண்டிய 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் நிதியை உடனடியாக விடுவிக்குமாறு தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.
- எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- ஆசிய கோப்பை வில்வித்தைப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியாவின் விஷ்ணு சௌத்ரி மற்றும் ராகுல் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<<>>>>>>

தில்லி முதலமைச்சராக பிஜேபியைச் சேர்ந்த திருமதி. ரேகா குப்தா சற்றுமுன் பதவியேற்றுக் கொண்டார்.

தில்லி ராம்லீலா மைதானத்தில் நடைபெற்ற விழாவில், துணைநிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனா அவருக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

திருமதி. ரேகா குப்தாவுடன், திரு. பர்வேஸ் சாகிப்சிங் வர்மா, திரு. ஆஷிஷ் ஷூது, திரு. மஞ்சிந்தர் சிங் சிர்ஸா, திரு. ரவீந்தர் இந்திரஜ் சிங், திரு. கபில் மிஸ்ரா, திரு. பங்கஜ்குமார் சிங் ஆகிய 6 பேர் புதிய அமைச்சர்களாக பதவியேற்கின்றனர்.

இந்த விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. அமித் ஷா, மற்றும் திரு. சந்திரபாபு நாயுடு, திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

<<<<<<>>>>>>

உத்தரபிரதேசத்தில் வேலைவாய்ப்பு மற்றும் மின்உற்பத்தியை அதிகரிப்பதற்கான பல்வேறு திட்டங்கள் அம்மாநில பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை அம்மாநில நிதியமைச்சர் திரு. சுரேஷ் கண்ணா, சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்தார்.

இந்த பட்ஜெட் மாநிலத்தில் உள்ள 25 கோடி மக்களின் நலனை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், முதலமைச்சரின் கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் புதிதாக செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் மூலம், வரும் நிதியாண்டில் புதிய தொழில் தொடங்க 800 பயனாளிகளுக்கு வங்கிக்கடனுதவி வழங்கப்படும் என்றும், இதன் மூலம் சுமார் 16 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், **Jalaun** மாவட்டத்தில் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 500 மெகாவாட் திறன் கொண்ட சூரியமின்சக்தி திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் திரு. சுரேஷ் கண்ணா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழக பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்க வேண்டிய 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் நிதியை உடனடியாக விடுவிக்குமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையிலும், லட்சக்கணக்கான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதியும் இந்த நிதியை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

தேசிய கல்விக் கொள்கையை முழுமையாக அமல்படுத்தி, மும்மொழிக் கொள்கை ஏற்கும் வரை தமிழகத்திற்கான நிதி விடுவிக்கப்படமாட்டாது என்று மத்திய கல்வி அமைச்சர் கூறியிருப்பது, தமிழக மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருமொழிக் கொள்கையை பின்பற்றுவதில் தமிழகம் உறுதியாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், இருமொழிக் கொள்கையில் கொண்டு வரப்படும் எந்தவொரு மாற்றமும் தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் பெரிய அளவில் பயனளிக்காது என்றும் முதலமைச்சர் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<>>>>>>

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, ராமேஸ்வரம் மீனவர்கள் 10 பேரை இலங்கை கடற்படை இன்று கைது செய்துள்ளது.

அவர்களது படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவர்களிடம் விசாரணை நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . .

(சவுண்ட் பைட் - சாங் - 8 நொடிகள்)

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இன்றும் ஏராளமானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

இந்த கும்பமேளா வரும் 26ஆம் தேதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், கடைசி நாளான மகாசிவராத்திரி தினத்தன்று பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்பதால், உத்தரபிரதேச அரசு பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது.

பக்தர்கள் எளிதில் சென்று வர ஏதுவாக கூடுதல் பேருந்து வசதி செய்யப்பட்டிருப்பதுடன், பிரயாக்ராஜ் நகரில் போக்குவரத்து மாற்றங்களும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் ஒரே நேரத்தில் அதிக அளவில் கூடுவதை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - சாங் - 8 நொடிகள்)

<<<<<<>>>>>>

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சம்பா அறுவடைப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வரும் நிலையில், மாவட்டம் முழுவதும் 175 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

விளைச்சலுக்கு தேவையான உரம் மற்றும் இடுபொருட்களை மத்திய அரசு மானிய விலையில் வழங்கியதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, விவசாயிகளும், விவசாய தொழிலாளர்களும் நன்றி தெரிவிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட — செல்வன் ஜெபராஜ் 46 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவின் சத்ரபதி சாம்பாஜி நகரில் உள்ள ஔரங்காபாத் தொழில் நகரம், நாட்டின் முன்னணி தொழில் வளாகமாக மேம்படுத்தப்படும் என்று மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சாம்பாஜி நகரில் தொழில் முனைவோருடன் ஆலோசனை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஔரங்காபாத் தொழில் நகரத்தில் சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிலாளர்களுக்கான குடியிருப்புகள், மருத்துவமனை, பல்கலைக் கழகம் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளதாக கூறினார்.

இதுதவிர, திறன் மேம்பாட்டு மையம், புத்தொழில் ஊக்குவிப்பு மையம் போன்றவையும் அமைக்கப்படவிருப்பதாக திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உலக சமூக நீதி நாள் இன்று கடைபிடிக்கப்படுகிறது

ஒற்றுமை, சமத்துவம், சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையிலும், வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மையை போக்கி, மனித உரிமைகளை நிலைநாட்டும் வகையிலும் கடந்த 2007ஆம் ஆண்டு முதல் இந்த நாள் கடைபிடிக்கப்படுகிறது.

அனைவருக்கும் அதிகாரமளித்தல் என்பதே இந்த ஆண்டின் மையக்கருத்தாகும்.

<<<<<<>>>>>>

அஸ்ஸாம் மாநிலத்தில் நிலக்கரி சுரங்கத்தில் சிக்கி உயிரிழந்த ஒன்பது தொழிலாளர்களின் உடல்கள் 44 நாட்களுக்குப் பின் மீட்கப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தின் **Dima Hasao** மாவட்டத்தில் உள்ள இந்த சுரங்கத்தில் வெள்ளப்பெருக்கு காரணமாக கடந்த மாதம் 6ஆம் தேதி ஏற்பட்ட விபத்தில் சிக்கிக் கொண்ட தொழிலாளர்கள் 4 பேரின் உடல்கள் மீட்கப்பட்ட நிலையில், எஞ்சியவர்களின் உடல்கள் இன்று மீட்கப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>>

பஞ்சாபிலிருந்து அமெரிக்காவிற்கு சட்டவிரோதமாக ஆட்களை அனுப்பி வைத்த புகாரின் பேரில், பயண ஏற்பாட்டாளர்கள் மீது கூடுதலாக ஐந்து முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த புகார் தொடர்பாக ஏற்கனவே 3 பேர் கைது செய்யப்பட்டு, 12 முதல் தகவல் அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், இதுவரை மொத்தம் 15 அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக பஞ்சாப் காவல்துறையின் சிறப்பு புலனாய்வு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>>

நாட்டில் கடந்த அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் சுமார் 4 ஆயிரம் தொழில் நிறுவனங்கள் நிதிநெருக்கடியிலிருந்து மீண்டு வந்துள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டி, வரி, பொருட்களின் மதிப்பு வீழ்ச்சி மற்றும் கடன்களை செலுத்துவதற்கு முந்தைய வருவாய் குறித்து, பாரத ஸ்டேட் வங்கி மேற்கொண்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட இந்த தொழில் நிறுவனங்களின் வருவாய் ஆறு புள்ளி இரண்டு சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ஆசிய கோப்பை வில்வித்தைப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியாவின் விஷ்ணு சௌத்ரி மற்றும் ராகுல் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டங்களில் விஷ்ணு சௌத்ரி 6-5 என்ற புள்ளிக்கணக்கில். சீன தைபேயின் **Liu Tai-Ten**-ஐயும், ராகுல் 7-3 என்ற புள்ளிக்கணக்கில் மலேசியாவின் **Muhammad Syafiq Busthamin** -ஐயும் வென்றார்.

<<<<<<>>>>>>

ஆசிய கோப்பை டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஷரத் கமல் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற இரண்டாவது சுற்றில் அவர் 11-6, 11-4, 11-7 என்ற செட்கணக்கில் ஏமனின் **Gubran Ebrahim-**ஐ வென்றார்.

<<<<<<>>>>>>